தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com

RNI-TNTAM/2023/88253
நமது தினகனி
NAMADHU DHINA KANI
காலை நாளிதழ்




| Vol: 02 | Issue: 100 | 4 Pages | 8.11.2024 | Friday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 100 | 4 பக்கங்கள் | 8.11.2024 | வெள்ளிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**இறந்தார் இறந்தா ரனையர் சினத்தைத்**
**துறந்தார் துறந்தார் துணை**

**விளக்கம்:**
சினத்தில் அளவு கடந்து சென்றவர் இறந்தவரைப் போன்றவர், சினத்தை அடியோடு துறந்தவர் துறந்தவர்க்கு ஒப்பாவர்.

# முதல்வர் பங்கேற்ற அரசு விழாவில் கலந்துகொண்டு கோரிக்கை மனு அளித்த வானதி சீனிவாசன்

கோவை, நவ.8

கோவை மாவட்டம் அனுப்பர்பாளையத்தில் ரூ.300 கோடியில் மாபெரும் நூலகத்திற்கும், அறிவியல் மையத்திற்கும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார். இந்த நிகழ்ச்சியில் கோவை தெற்கு தொகுதி எம்எல்ஏ வானதி சீனிவாசன் கலந்து கொண்டார்.

இதைத்தொடர்ந்து அவர் முதலமைச்சரிடம் கோரிக்கை மனு அளித்து உரையாற்றினார்.

இதுதொடர்பாக கோவை தெற்கு தொகுதி எம்எல்ஏ வானதி சீனிவாசன் செய்தியாளர்களிடம் கூறுகையில்,

கோயம்புத்தூரில் எனது தொகுதி தொடர்பாகவும், கோயம்புத்தூர் மெட்ரோ, விஷ்வ கர்மா திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று கோரிக்கை மனு கொடுத்துள்ளேன். முதல்வர் பரிசீலிப்பதாய் தெரிவித்துள்ளார்.




முதல்வர் கோயம்புத்தூருக்கு வருவது மூலமாக நிறைய திட்டங்கள் கிடைத்துள்ளது. சாலைகள் எல்லாம் கிடைக்கிறது என்று நன்றி தெரிவித்தேன். திரும்பவும் கோவைக்கு வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இது திமுக கட்சி நிகழ்ச்சி அல்ல. இது அரசாங்கத்தின் நிகழ்ச்சி. அது மட்டுமல்ல இது எனது தொகுதியில் நடக்கும் நிகழ்ச்சி. ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதி என்ற அடிப்படையில் நான் கலந்துகொண்டேன். என்னை பொறுத்தவரை தொகுதி மக்கள் வாக்களித்து இருக்கிறார்கள். அவர்களுக்கான சில கோரிக்கைகளை நான் நிறைவேற்ற வேண்டி உள்ளது. எதிர்க்கட்சி என்றாலும் அவர்கள் ஆளும் அரசாங்கத்தில் இருக்கின்றபோது அந்த விதத்தில் தான் அணுகுகிறேனே தவிர கட்சி ரீதியாக பார்க்கவில்லை என்று கூறினார்.

## நீ தூங்கு தெய்வமே: கோவில் பிரசாதத்தில் மயக்க மருந்து.. காரை அபேஸ் செய்த பலே ஆசாமி



மத்திய பிரதேசம், நவ.8

மத்தியப் பிரதேசத்தில் டாக்சி ஓட்டுநருக்கு மயக்க மருந்து கலந்த கோவில் பிரசாதம் கொடுத்து பயணி ஒருவர் காரை கொள்ளையடித்து சென்ற சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தப்ரா பேருந்து நிலையத்தில் டாக்சி ஓட்டுநரை அணிகிய நபர், அவரது உறவினருக்கு விபத்து ஏற்பட்டதாகவும் ஜான்சி நகருக்கு செல்ல வேண்டும் என்று கூறியுள்ளார். அதற்கு ஓட்டுநர் 1800 ரூபாய் பணம் வேண்டும் என்று கூற அவரும் ஒப்புக்கொண்டு காரில் எறியுள்ளார்.

செல்லும் வழியில், தாதியாவில் உள்ள புகழ்பெற்ற பீதாம்பர மாயி கோயிலில் நிறுத்த முடியுமா என்று பயணி கேட்க, ஓட்டுநரும் அங்கு காரை நிறுத்தியுள்ளார். அப்போது கோவிலில் வாங்கிய பிரசாதத்தை ஓட்டுனருக்கு பயணி கொடுத்துள்ளார். அந்த பிரசாதத்தை சாப்பிட்டுவிட்டு காரை எடுத்தபோது வழியிலேயே ஓட்டுநர் மயங்கியுள்ளார்.

அவர் கண்விழித்து பார்த்தபோது காரில் இல்லை. சாலையில் படுத்திருந்தார். சுயநினைவு இல்லாமல் சாலையில் படுத்திருந்த அவரை அக்கம் பக்கத்தினர் மீட்டு மருத்துவமனையில் சேர்த்தனர்.

மருத்துவமனையில் சுயநினைவுக்கு வந்த ஓட்டுநர், தனது கார், மொபைல் போன், பணம் உள்ளிட்டவை காணாமல் போனதை அறிந்து உடனடியாக காவல் நிலையத்திற்கு சென்று புகார் அளித்தார். காரை திருடிய நபரை போலீசார் வலைவீசி தேடி வருகின்றனர்.

## மாரடைப்பால் மரணமடைந்த ஓட்டுநர்.. துணிச்சலாக செயல்பட்டு பயணிகளின் உயிரை காப்பாற்றிய நடத்துனர்




கர்நாடகா, நவ.8

கர்நாடகா மாநில தலைநகர் பெங்களூருவில் பேருந்தை ஓட்டிக்கொண்டிருந்த போதே ஓட்டுநர் ஒருவர் மாரடைப்பு ஏற்பட்ட உயிரிழந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

11 மணியளவில் நெலமங்கலவில் இருந்து தசனபுரா நோக்கி பேருந்து சென்று கொண்டிருந்த போது ஓட்டுநர் மாரடைப்பு ஏற்பட்டு உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பான சிசிடிவி காட்சிகள் இணையத்தில் வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அந்த வீடியோவில், ஓட்டுநர் மாரடைப்பு ஏற்பட்டு இருக்கையில் இருந்து சரிந்து விழுகிறார். ஓட்டுநர் இல்லாமல் பேருந்து தடுமாறுகிறது. அப்போது உடனடியாக ஓட்டுநர் இருக்கையில் அமரும் நடத்துநர் பேருந்தை லாவகமாக நிறுத்தி பயணிகளின் உயிரை காப்பாற்றியுள்ளார்.

உயிரிழந்த ஓட்டுநர் பெயர் கிரண் குமார் என்று தெரியவந்துள்ளது. துணிச்சலாக செயல்பட்டு பலரின் உயிரை காப்பாற்றிய நடத்துநர் ஓபலேஷ்க்கு பலரும் பாராட்டு தெரிவித்து வருகின்றனர்.

## அமெரிக்க துணை அதிபரின் மனைவி சொந்த ஊரான ஆந்திராவில் பட்டாசு வெடித்து கொண்டாட்டம்



அமெரிக்கா, நவ.8

அமெரிக்க அதிபர் தேர்தலில் 277 எல்க்டோரல் வாக்குகள் பெற்று அமெரிக்க அதிபர் பதவியை குடியரசு கட்சி வேட்பாளர் டொனல்டு டிரம்ப் வென்றார். ஆளும் ஜனநாயக கட்சி வேட்பாளர் கமலா ஹாரிஸ் 224 எல்க்டோரல் வாக்குகள் மட்டுமே பெற்று தோல்வியை தழுவினார்.

வெற்றி உறுதியான பின்னர் புளோரிடா மாகாணத்தில் டிரம்ப் தனது குடும்பத்துடன் கலந்துகொண்டு வெற்றியுரை ஆற்றினார். அப்போது மேடையில் நின்றிருந்த ஜேடி வான்ஸ் மற்றும் அவரது மனைவி உஷா சிலுக்குரி வான்ஸ் ஆகியோரை நோக்கி கைகாட்டி இனி நான் உங்களை துணை அதிபர் என்று அழைக்கலாம் என்று பெருமிதமாக கூறினார்.

அமெரிக்க அதிபர் தேர்தலில் துணை அதிபர் வேட்பாளராக ஜேடி வான்ஸ் முன்னர் அறிவிக்கப்பட்டபோது அவரது இந்திய வம்சாவளியை சேர்ந்த மனைவி உஷா கவனம் பெற்றார். கமலா ஹாரிஸ்க்கு எதிரான குடியரசுக் கட்சியின் நகர்வாக இது பார்க்கப்பட்டது. உஷா சிலுக்குரியின் குடும்பம் ஆந்திர மாநிலம் வட்லூருவை பூர்வீகமாக கொண்டது.

இந்தநிலையில், அமெரிக்காவின் துணை அதிபர் ஜேடி வான்ஸ் மனைவி உஷா சிலுக்குரி பிறந்த ஆந்திர மாநிலத்தின் வட்லூருவில் கிராம மக்கள் பட்டாசு வெடித்து கொண்டாடினர். இது தொடர்பான வீடியோ சமூக வலைதளங்களில் அதிகம் பகிரப்படுகிறது.

## சத்தியமூர்த்திப்பெருமாள் திருக்கோயில் மற்றும் அருள்மிகு சத்தியகிரீஸ்வரர் திருக்கோயிலில் பெருவிழாக்கான முன்னேற்பாடு பணிகள்: கலெக்டர் ஆய்வு



புதுக்கோட்டை, நவ.8

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் வட்டம், அருள்மிகு சத்தியமூர்த்திப்பெருமாள் திருக்கோயிலில் அஷ்டபந்தன மஹா ஸம்ப்ரோஷண பெருவிழாவும் மற்றும் சத்தியகிரீஸ்வரர் திருக்கோயிலில் திருக்குட நன்னீராட்டு பெருவிழாவும் நடைபெறவுள்ளதையொட்டி, பாதுகாப்பு மற்றும் முன்னேற்பாடு பணிகள் குறித்து, மாவட்ட கலெக்டர் மு.அருணா மாவட்ட காவல் கண்காணிப்பாளர் வந்திதா பாண்டே, முன்னிலையில் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் வட்டம், சத்தியகிரீஸ்வரர் திருக்கோயிலில் திருக்குட நன்னீராட்டு பெருவிழா 08.11.2024 வெள்ளிக்கிழமையன்று காலை 8.30 மணிக்கு மேல் 09.30 மணிக்குள் நடைபெறவுள்ளது. இதேபோன்று, திருமயம் வட்டம், சத்தியமூர்த்திப்பெருமாள் திருக்கோயிலில் அஷ்டபந்தன மஹா ஸம்ப்ரோஷண பெருவிழா 08.11.2024 அன்று காலை 9.30 மணிக்கு மேல் 10.30 மணிக்குள் நடைபெறவுள்ளது.

இப்பெருவிழா நடைபெறவுள்ளதையொட்டி, திருக்கோயிலில் யாகசாலை அமைப்பது குறித்தும், பக்தர்கள் சிரமமின்றி பெருவிழாவினை காணும் வகையில் தனித்தனி வழிகள் அமைப்பது குறித்தும், திருக்கோயிலில் திருப்பணிகள் நடைபெற்று வருவது குறித்தும், அன்னதானம் நடைபெறும் இடத்தில் பக்தர்களுக்கு போதிய இடவசதிகள் ஏற்படுத்துவது குறித்தும், பக்தர்கள் தரிசனம் செய்வதற்கு ஆண்ஃபெண் தனித்தனி வரிசை தடுப்புகள் அமைப்பது குறித்தும், திருக்கோயிலில் பாதுகாப்பான குடிநீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் ஏற்படுத்துவது குறித்தும், பக்தர்கள் வாகனங்களை பாதுகாப்பாக நிறுத்திட வாகன நிறுத்துமிடம் அமைப்பது குறித்தும், பக்தர்கள் நுழைவாயிலில் உள், வெளியே செல்வதற்கான தடுப்புகள் அமைப்பது குறித்தும், பக்தர்கள் விரைவாக தரிசனம் செய்வதற்கு மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்தும் உள்ளிட்ட பல்வேறு பாதுகாப்பு மற்றும் முன்னேற்பாடு பணிகள் குறித்து, மாவட்ட கலெக்டர் மு.அருணா, நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்நிகழ்வில், புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் பா.ஐஸ்வர்யா, செயல் அலுவலர் (திருக்கோயில்கள்) முத்துராமன், வட்டாட்சியர் புவியரசன், ஊராட்சிமன்றத் தலைவர் (திருமயம்) சிக்கந்தர், ஆலய மேற்பார்வையாளர் நடராஜன் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

## அண்ணாமலை நகர் பேரூராட்சியில் மாடு வளர்ப்போர் ஆலோசனை கூட்டம்

சிதம்பரம், நவ. 8

சிதம்பரம் அடுத்துள்ள அண்ணாமலை நகர் பேரூராட்சி நிர்வாகம் மற்றும் காவல்துறை சார்பில் மாடு உரிமையாளர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. அண்ணாமலைநகர் பேரூராட்சியில் நடைபெற்ற கூட்டத்திற்கு பேரூராட்சி தலைவர் பழனி தலைமை தாங்கினார் பேசினார். செயல் அலுவலர் பாலமுருகன் முன்னிலை வகித்தார். இந்நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக அண்ணாமலை நகர் காவல் நிலைய இன்ஸ்பெக்டர் அம்பேத்கர் கலந்து கொண்டு சாலைகளில் சுற்றி திரியும் மாடுகளை மாட்டின் உரிமையாளர்கள் வீட்டில் கட்டி வைக்க வேண்டும். தெருவில் மாடுகளை அவிழ்த்து விடக்கூடாது உட்பட பல்வேறு ஆலோசனைகள் வழங்கினார். மேலும் சாலையில் மாடு திரிந்தால் உரிமையாளர்களுக்கு மாடு ஒப்படைக்கப்படாது என தெரிவித்தார். இக்கூட்டத்தில் பேரூராட்சி கவுன்சிலர்கள் அண்ணாமலைநகர் பகுதியைச் சேர்ந்த மாட்டின் உரிமையாளர்கள் மற்றும் தூய்மை பணியாளர்கள் உள்பல பலர் பங்கேற்றனர்.



## காவலர் பல்பொருள் அங்காடியில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திடீர் ஆய்வு மேற்கொண்டார்

தென்காசி, நவ.8

காவல்துறையினர் மற்றும் அவரது குடும்பத்தினர் பயன்பெறும் விதமாக இயங்கி வரும் காவலர் பல்பொருள் அங்காடியை (போலீஸ் கேன்டீன்) மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்ரீனிவாசன் ஆய்வு மேற்கொண்டார்.

இதில் பல்பொருள் அங்காடியில் பொருட்களை வாங்க வருபவர்கள் நேரத்தை வீணடிக்காமல் குறைவான நேரத்தில் எளிதாக வாங்குவதற்கும், அங்காடியில் இல்லாத பொருட்களை அங்காடி பட்டியலில் சேர்ப்பதற்கு ஏற்பாடு செய்தல், எளிதில் பார்க்கும் விதமாகவும் மற்றும் பொருள்களின் விலை அடங்கிய பட்டியல் தயார் செய்தல் போன்ற நடைமுறைகளை ஏற்பாடு செய்த நிலையில் அவை முறையாக செயல்படுகிறதா என திடீர் ஆய்வு மேற்கொண்டு அங்கு பணிபுரியும் காவலர்களுக்கு தகுந்த அறிவுரைகள் வழங்கினார்.





வேலூர் மாவட்ட கலெக்டர் சுப்புலெட்சுமி தலைமையில் கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற போதைப்பொருள் தடுப்பு குறித்து மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் போதை தடுப்பு விழிப்புணர்வு முகாமில் அனைவரும் போதை பொருட்களுக்கு எதிரான உறுதிமொழியை எடுத்துக்கொண்டனர்.

## சவுதிஅரேபியாவில் வேலை பார்த்து வந்த சாம்பவர்வடகரை டிரைவர் பலி

சாம்பவர்வடகரை, நவ.8

தென்காசி மாவட்டம் சுரண்டையை அடுத்த சாம்பவர்வடகரை உலக்கூட தெருவை சேர்ந்தவர் ஆறுமுகசாமி. இவரது மகன் உமாசங்கர்(வயது 30). இவருக்கு மனைவி மற்றும் 2 வயதில் குழந்தை உள்ளது.

உமாசங்கர் சவுதி அரேபியாவில் கடந்த 1 வருடமாக டிரைவர் வேலை பார்த்து வந்தார். இந்நிலையில், நேற்று அங்கு அவர் தனது உறவினர் ஒருவருடன் டீ குடித்துக்கொண்டிருந்த போது அவர் திடீரென மயங்கி விழுந்து இறந்துவிட்டார்.

இதுகுறித்து தகவல் அறிந்த அவரது உறவினர்கள் கதறி துடித்தனர். அவரது உடலை சொந்த ஊருக்கு கொண்டுவர அரசு உதவி செய்ய வேண்டும் என்று உறவினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். மேலும் இதுகுறித்து தென்காசி மாவட்ட கலெக்டரிடமும் கோரிக்கை மனு அளிக்க முடிவு செய்துள்ளனர்.

## நெல்லையில் தியேட்டர் மேலாளருக்கு அரிவாள் வெட்டு 2 வாலிபர்களுக்கு வலைவீச்சு

நெல்லை, நவ.8

சென்னையை சேர்ந்தவர் சரவணன் (வயது 30). இவர் நெல்லை வண்ணார்பேட்டை தெற்கு புறவழிச் சாலையில் உள்ள ஒரு தியேட்டரில் மேலாளராக பணியாற்றி வருகிறார்.

இதற்காக வண்ணார்பேட்டை எட்டுத்தொகை தெருவில் ஒரு வாடகை வீட்டில் அவர் குடியிருந்து வருகிறார்.

தியேட்டரில் இரவு காட்சி முடிவடைந்து அவர் வண்ணார்பேட்டை நோக்கி சென்று கொண்டிருந்தார். அப்போது எட்டுத்தொகை தெருவில் அவரை வழிமறித்த 2 வாலிபர்கள் திடீரென அரிவாளால் சரவணன் தோள்பட்டை, கையில் வெட்டிவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றார்.

இதில் காயம் அடைந்த சரவணனை அந்தப் பகுதி மக்கள் மீட்டு நெல்லை அரசு ஆஸ்பத்திரிக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தனர். இது தொடர்பாக பாளையங்கோட்டை போலீசார் வழக்குப்பதிவு செய்து மர்மநபரை தேடி வருகின்றனர்.

முதல் கட்ட விசாரணையில் சரவணன் வேலை பார்க்கும் தியேட்டரில் நெல்லை டவுன் பகத்சிங் தெருவை சேர்ந்த கார்த்தி (28) என்பவர் பணியாற்றி வந்தார். கடந்த 8 மாதங்களுக்கு முன்பு அவரை வேலையை விட்டு நீக்கி உள்ளனர்.

தனது வேலை போனதற்கு சரவணன் தான் காரணம் என்று நினைத்த கார்த்தி, தனது நண்பரான ஜோதி சங்கர் என்பவரை அழைத்துக் கொண்டு நேற்று இரவு வண்ணார்பேட்டை எட்டுத்தொகை தெருவுக்கு வந்துள்ளார். தொடர்ந்து சரவணனை வெட்டிவிட்டு சென்றது என்பது தெரிய வந்தது. இதையடுத்து அவர்கள் 2 பேரையும் போலீசார் தேடி வருகின்றனர்.

## மதுரை செல்லூரில் கிரைண்டர் கல்லை தலையில் போட்டு மகன் கொடூர கொலை தந்தை கைது

மதுரை, நவ.8

மதுரை செல்லூர் நந்தவனம் பகுதியைச் சேர்ந்தவர் வாசுதேவன் (வயது 62). இவருக்கு ராமன், லட்சுமணன் என இரண்டு மகன்கள் இருந்தனர். இதில் லட்சுமணன் (22) படித்துவிட்டு, எந்தவித வேலைக்கும் செல்லாமல் மது போதைக்கு அடிமையாகி சுற்றித்திரிந்தார்.

மேலும் அடிக்கடி மது குடிக்க பணம் கேட்டு தந்தை மற்றும் உறவினர்களிடையே தகராறிலும் ஈடுபட்டு வந்துள்ளார். பல முறை பெற்றோர் அவரை கண்டித்தும் லட்சுமணன் திருந்தவில்லை. பல சமயங்களில் மது பாட்டிலை வாங்கிவந்து வீட்டிலேயே குடிக்கும் நிலைக்கு வந்ததால் அவரது பெற்றோர் கடும் ஆத்திரத்தில் இருந்தனர். இந்த நிலையில் நேற்று இரவு மது போதையில் நள்ளிரவில் வீடு திரும்பிய லட்சுமணன், மேலும் தனக்கு மது வேண்டும் என்று வற்புறுத்தி தந்தையிடம் தகராறு செய்துள்ளார். இதனால் ஆத்திரமடைந்த வாசுதேவன் தனது வீட்டில் உள்ள கிரைண்டர் கல்லை எடுத்து லட்சுமனின் தலையில் ஓங்கி அடித்துள்ளார்.

இதில் நிலைகுலைந்த லட்சுமணன் சம்பவ இடத்திலேயே பலத்த காயம் அடைந்து ரத்த வெள்ளத்தில் துடிதுடித்து பரிதாபமாக உயிரிழந்தார். இந்த தகவல் அறிந்து போலீசார் விரைந்து வந்து இறந்த லட்சுமணனின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் மகனை கொடூரமாக கொலை செய்த வாசுதேவனை கைது செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள். இதில் வாசுதேவனும் மது போதையில் இருந்தது முதல் கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது. இந்த சம்பவம் செல்லூர் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

## தொழில் செய்யப் போவதாக கூறி பெண்ணிடம் ரூ.15 லட்சம் மோசடி; கணவன்மனைவி மீது வழக்கு பதிவு

மதுரை, நவ.8

மதுரை எஸ்.எஸ். காலனி நாவலர் நகர் 1வது தெருவைச் சேர்ந்தவர் நந்தகுமார். இவரது மனைவி ஆனந்தி (வயது 32). இவரின் தங்கை அனு, பொட்டபாளையம் பகுதியில் உள்ள தனியார் கல்லூரியில் படித்தார். அப்போது அவருடன் படித்த திருநெல்வேலி மாவட்டத்தை சேர்ந்த மதன் என்பவரது மனைவி அம்பிகாவின் அறிமுகம் கிடைத்துள்ளது. இருவரும் நண்பர்களாக பழகி வந்துள்ளனர். அதன் அடிப்படையில் அம்பிகா அடிக்கடி ஆனந்தி வீட்டிற்கு வந்து சென்றுள்ளார்.

இந்த நிலையில் அம்பிகா பெரிய அளவில் சொந்தமாக தொழில் செய்ய இருப்பதாகவும் அதற்கு பணம் தேவைப்படுவதாகவும் ஆனந்தியிடம் தெரிவித்துள்ளார். அதில் முதலீடு செய்வதற்கு பணம் தேவைப்படுவதாக கூறி ஆனந்தியிடம் கடனாகவும் கேட்டுள்ளார். அவ்வாறு கொடுக்கும் பணத்தை சிறிது சிறிதாக தந்துவிடுகிறேன் என்று ஆனந்தியிடமும், அவரது தங்கை அனுவிடமும் வாக்குறுதி கொடுத்துள்ளனர். அதனை நம்பிய ஆனந்தி கடந்த ஆண்டு பிப்ரவரி முதல் டிசம்பர் மாதம் வரை பல்வேறு தவணைகளில் ஆனந்தி மற்றும் அவருடைய சகோதரி அனு ஆகியோர் வங்கி கணக்கிலிருந்து அம்பிகா மற்றும் மதன் ஆகியோருக்கு ரூ.12 லட்சத்து 25 ஆயிரம் வரை பணம் அனுப்பி உள்ளனர். பின்னர் ஆனந்தியின் வீட்டிற்கு நேரடியாக வந்து 3 லட்சம் ரூபாய் பணத்தை அம்பிகாவும் அவரது கணவரும் பெற்றுள்ளனர்.

ஆனந்தியிடம் வாங்கிய பணத்தில் ரூ.3 லட்சத்து 84 ஆயிரத்தை திருப்பி கொடுத்துவிட்டனர். மீதி பணம் ரூ.15 லட்சத்து 25 ஆயிரத்தை திருப்பி தருமாறு ஆனந்தி பலமுறை கேட்டுள்ளார். அதற்கு மதனும் அவரது மனைவி அம்பிகாவும் ஆனந்தி மற்றும் அனுவை ஆபாசமாக பேசி கொலை மிரட்டல் கொடுத்துள்ளனர்.

இதையடுத்து அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க கோரி ஆனந்தி கோர்ட்டில் மனு தாக்கல் செய்தார். கோர்ட்டு உத்தரவுப்படி எஸ்.எஸ்.காலனி போலீசார் பண மோசடி மற்றும் கொலை மிரட்டல் விடுத்த அம்பிகா மற்றும் அவரது கணவர் மதன் ஆகியோர் மீது வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

## டி.ஐ.ஜி வீட்டில் கைதி திருடியதாக சித்ரவதை வேலூர் ஜெயில் வார்டன் உள்பட 11 பேர் சஸ்பெண்டு

வேலூர், நவ.8

கிருஷ்ணகிரி மாவட்டம் மாணிக்கம்கோட்டை பகுதியை சேர்ந்தவர் சிவக்குமார் (வயது 30). இவர் கொலை வழக்கில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு வேலூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்.

இந்தநிலையில் கடந்த சில மாதங்களுக்கு முன்பு வேலூர் சரக சிறைத்துறை டி.ஐ.ஜி. ராஜலட்சுமி வீட்டில் வேலைகள் செய்வதற்காக சிவக்குமாரை, சிறைத்துறை வார்டன்கள் அழைத்து சென்றுள்ளனர்.

அப்போது டி.ஐ.ஜி. வீட்டில் இருந்த பணம், வெள்ளி பொருட்களை திருடியதாக கூறி சிவக்குமாரை சிறை வார்டன்கள், காவலர்கள் சிறையில் தனி அறையில் அடைத்து சித்ரவதை செய்ததாக கூறப்பட்டது.

இதுதொடர்பாக சிவக்குமாரின் தாயார் கலாவதி சென்னை ஐகோர்ட்டில் மனு தாக்கல் செய்தார். அதனை விசாரித்த நீதிபதிகள் இதுதொடர்பாக சி.பி.சி.ஐ.டி போலீசார் வழக்குப்பதிந்து விசாரணை நடத்தும்படி உத்தரவிட்டனர்.

அதன்பேரில் வேலூர் சி.பி.சி.ஐ.டி. போலீசார் வேலூர் சரக சிறைத்துறை டி.ஐ.ஜி. ராஜலட்சுமி, ஜெயில் சூப்பிரண்டு அப்துல்ரகுமான், ஜெயிலர் அருள்குமரன் உள்பட 14 பேர் மீது வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர்.

ஆயுள் தண்டனை கைதி சிவக்குமார் சேலம் மத்திய சிறைக்கு மாற்றம் செய்யப்பட்டார்.

இதையடுத்து ஏற்கனவே வேலூர் சரக முன்னாள் டி.ஐ.ஜி. ராஜலட்சுமி, ஜெயில் சூப்பிரண்டு அப்துல்ரகுமான், ஜெயிலர் அருள்குமரன் ஆகியோர் சஸ்பெண்டு செய்யப்பட்டனர்.

இதனை தொடர்ந்து வார்டன்கள் சுரேஷ், சேது, சிறைக்காவலர்கள் ராஜூ, ரஷித், மணி, பிரசாந்த், ராஜா, தமிழ்செல்வன், விஜி, பெண் சிறைக்காவலர் சரஸ்வதி, செல்வி ஆகிய 11 பேர் நேற்று சஸ்பெண்டு செய்யப்பட்டனர்.

## விழுப்புரத்தில் வேளாண் விற்பனை கூடத்தில் துணை முதலமைச்சர் ஆய்வு

சென்னை, நவ.8

தமிழக அரசு வெளியிட்டு உள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

விழுப்புரம் விற்பனைக் குழுஒழுங்கு முறை விற்பனைக்கூடத்தில் 2 ஆயிரம் மெ.டன் கொள்ளளவு கொண்ட ஒரு கிடங்கு, 500 மெ.டன் கொள்ளளவு கொண்ட 2 கிடங்குகள், விவசாயிகள் உற்பத்தி செய்யும் பழவகைகள் (எளிதில் அழுகும் வேளாண் பொருட்கள்) இருப்பு வைத்து ஏல விற்பனை செய்வதற்காக 25 மெ.டன் கொள்ளளவு கொண்ட குளிர்பதன கிடங்கு மற்றும் ஒரு திறந்தவெளி எலக் கொட்டகை ஆகிய வசதிகள் உள்ளன. விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்த நெல், நிலக்கடலை, பருத்தி, எள் ஆகிய வேளாண் பொருட்களை விற்பனை கூடத்திற்கு கொண்டு வந்த அன்றைய தினமே தரப்பரிசோதனை கருவிகளின் மூலம் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் அடிப்படையில் ஏலதார்களால் விலை நிர்ணயம் செய்யப்பட்டு, ஏலம் விடப்படுகின்றன.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் விழுப்புரம் விற்பனைக்குழு ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் பருத்தி எள், நிலக்கடலை (மணிலா) மற்றும் நெல் உள்ளிட்ட விளை பொருட்கள் வைக்கப்பட்டுள்ள கிடங்குகளையும், திறந்த வெளி ஏலக்கொட்டகையில் தரப்பரிசோதனை நடைபெறுவதையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது, ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் நெல் விற்பனை செய்வதற்காக வந்திருந்த பிடாகத்தை சேர்ந்த சக்கரவர்த்தி என்ற விவசாயியிடம்



தற்பொழுது நெல் விற்பனை செய்ததற்கான ஏலத் தொகை விவரம், எத்தனை நாட்களுக்குள் தங்களுடைய வங்கி கணக்கில் நெல்லிற்கான தொகை வரவு வைக்கப்படுகிறது என்பது குறித்து துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கேட்டறிந்து, அரசு அலுவலர்கள் தெரிவித்த விவரங்களுடன் விவசாயி தெரிவித்த விவரங்கள் சரியாகஉள்ளதாஎன்று ஆய்வு செய்தார்.

மேலும், வேளாண் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் குடிநீர், கழிப்பறை வசதி, வாகன நிறுத்தும் வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் குறித்தும், ஒழுங்கு முறை விற்பனைக்கூடத்தில், அன்றாட சந்தை நில விவரம், விளைபொருட்கள் இருப்பு பதிவேடு ஆகியவற்றை பார்வையிட்டும் ஆய்வு மேற்கொண்டார்.

விவசாயிகள் விற்பனை செய்த விளைபொருட்களுக்கான ஏலத்தொகை அவர்களின் வங்கிக்கணக்கில் இநாம் மின்னணு ஏல முறை திட்டத்தின்கீழ், வரவு வைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படுவதை கணினியில் அமர்ந்து கணினியை இயக்கி ஆய்வு மேற்கொண்டார்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## வீடு முழுவதும் விஜய்யின் புகைப்படங்கள்: நடிகர் விஜய்யை மூத்த மகனாக பாவித்து வாழும் 65 வயது ரசிகை

வி.கே.புரம், நவ.8

நடிகர் விஜய்க்கு ஏராளமான பெண் ரசிகைகள் உள்ளனர். அந்த வகையில் நெல்லை மாவட்டத்தை சேர்ந்த 65 வயது மூதாட்டி ஒருவர் விஜய்யின் தீவிர ரசிகையாக மட்டுமின்றி, விஜயை தனது மகனாகவே பாவித்து வாழ்ந்து வருகிறார்.



அம்பாசமுத்திரம் அருகே உள்ள மன்னார் கோவில் கிராமத்தை சேர்ந்தவர் வள்ளியம்மாள் (வயது 65). இவருக்கு வெங்கடேசன் என்ற ஒரே ஒரு மகன் மட்டும் உள்ளார்.

கணவரை இழந்த நிலையில் வள்ளியம்மாள் தனது மகனுடன் மன்னார்கோவில் கிராமத்தில் வசித்து வருகிறார். வள்ளியம்மாள் கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக நடிகர் விஜய்யின் தீவிர ரசிகையாக இருந்து வருகிறார்.

விஜய்யின் முதல் படமான நாளைய தீர்ப்பு கடந்த 1992ம் ஆண்டு வெளியானது. அப்படத்தை பார்த்த வள்ளியம்மாள் அன்று முதல் விஜய்யின் நடிப்பு பிடித்து அவரது ரசிகையாக மாறினார்.

1993ம் ஆண்டு வெளியான செந்தூரப்பாண்டி படத்தில் விஜயகாந்த் உடன் விஜய் இணைந்து நடித்திருப்பார். அந்தப் படத்தையும் திரையில் பார்த்த வள்ளியம்மாள் விஜய்யின் தீவிர ரசிகையாக மாறத் தொடங்கினார். அன்று முதல் கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக விஜய் நடிப்பில் வெளியான திரைப்படங்களை ஒன்று விடாமல் தியேட்டரில் சென்று பார்த்து வந்துள்ளார்.

விஜய்யின் திரைப்படம் ஒரு தியேட்டரில் எத்தனை நாட்கள் ஓடுகிறதோ, அதுவரை வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமை அன்று வள்ளியம்மாள் தவறாமல் அந்த படத்தை பார்த்து வருகிறாராம்.

விஜய்யின் நடிப்பு, நடனம், வசனம் என அனைத்தும் வள்ளியம்மாளை கவர்ந்துள்ளது. ஒவ்வொரு படத்திலும் விஜய்யை ரசித்து வந்த வள்ளியம்மாள் ஒரு கட்டத்தில் விஜய்யை தனது மகனாகவே பாவித்து வருகிறார்.

கடந்த பல ஆண்டுகளாகவே வள்ளியம்மாள் ஊருக்குள் தனக்கு விஜய்யுடன் சேர்த்து மொத்தம் 2 மகன் அதில் நடிகர் விஜய் தான் எனக்கு மூத்த மகன் என்று கூறி வருகிறார். இதன் காரணமாகவே ஊருக்குள் வள்ளியம்மாள் பாட்டியை விஜய் வள்ளியம்மாள் என்று அழைத்து வருகின்றனர்.

விஜய்யின் நினைவாக வள்ளியம்மாள் பாட்டி வீட்டில் ஆங்காங்கே விஜய் நடித்த படங்களின் புகைப்படங்கள் மற்றும் விஜய் தனது மனைவியுடன் இருக்கும் படங்களை பிரேம் செய்து மாட்டி வைத்துள்ளார்.

தனது வீட்டு பீரோவில் விஜய்யின் புகைப்படம் மற்றும் அவர் குறித்த செய்திகளை பத்திரப்படுத்தி வருகிறார். விஜய் மீது தீராத அன்பை வள்ளியம்மாள்பாட்டி செலுத்தி வருகிறார்.

வள்ளியம்மாள் கூறும் போது, நடிகர் விஜய் தான் எனக்கு தலைமகன். செந்தூரபாண்டி படம் பார்த்ததில் இருந்து விஜய்யை பார்க்க வேண்டும் என்பது தான் எனது வாழ்நாள் ஆசை. விஜய் வரலாறு புத்தகம் மூலம் அவர் பற்றிய அனைத்து விபரங்களையும் தெரிந்து வைத்துள்ளேன். சினிமாவை விட்டுவிட்டு விஜய் அரசியலுக்கு வந்தது வருத்தம் தான். இருந்தாலும் அவர் அரசியலில் வெற்றி பெற்று முதலமைச்சராகி அனைத்து மக்களுக்கும் நல்லது செய்ய வேண்டும். முதலமைச்சரோடு நின்று விடாமல் பிரதமராக வேண்டும் என்பது எனது ஆசை என்றார்.

## எல்லை தாண்டியதாக கைதான ராமேசுவரம் மீனவர்கள் 16 பேருக்கு காவல் நீட்டிப்பு

ராமேசுவரம், நவ.8

ராமநாதபுரம் மாவட்டம் ராமேசுவரம் மீன்பிடி துறைமுகத்தில் இருந்து கடந்த மாதம் 23ந்தேதி 399 விசைப்படகுகள் மீன்பிடி அனுமதி டோக்கன் பெற்று கடலுக்கு மீன்பிடிக்க சென்றன. நள்ளிரவில் அவர்கள் இந்திய கடல் எல்லையில் கச்சத்தீவு அருகே வலைகளை விரித்து மீன் பிடித்துக் கொண்டிருந்தனர்.

அப்போது இலங்கை கடற்படைக்கு சொந்தமான ரோந்து கப்பல்கள் மீனவர்கள் மீன் பிடித்த பகுதிக்கு மின்னல் வேகத்தில் வந்தது. அவர்களை பார்த்ததும் மீனவர்கள் அங்கிருந்து அவசரம், அவசரமாக புறப்பட்டனர். இருந்தபோதிலும் 2 விசைப்படகுகளை இலங்கை கடற்படையினர் சுற்றி வளைத்தனர். அதில் இருந்த ராமேசுவரம் மீனவர்கள் 16 பேரை எல்லை தாண்டி மீன் பிடித்ததாக கூறி சிறை பிடித்தனர். அவர்களின் படகுகளும் பறிமுதல் செய்து இலங்கைக்கு கொண்டு சென்றனர். பின்னர் ஊர்க்காவல் துறை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட அவர்கள் யாழ்ப்பாணம் சிறையில் அடைக்கப்பட்டனர்.

இந்தநிலையில் காவல் நிறைவடைந்ததையடுத்து இன்று 16 மீனவர்களும் ஊர்க்காவல் துறை நீதிமன்றத்தில் ஆஜரானார்கள். அவர்களுக்கு வருகிற 20ந்தேதி காவலை நீடித்து கோர்ட்டு உத்தரவிட்டது. இதையடுத்து மீண்டும் அவர்கள் யாழ்ப்பாணம் சிறைக்கு பலத்த பாதுகாப்புடன் அழைத்து செல்லப்பட்டனர்.

## வருகிறது டிரைவரே இல்லாத மெட்ரோ ரெயில்கள்.... அடுத்த ஆண்டு மார்ச் மாதத்துக்குள்

சென்னை, நவ.8

சென்னையில் 2ம் கட்ட மெட்ரோ ரெயில் திட்டப்பணிகள் ரூ.63,246 கோடி மதிப்பில் மும்முரமாக நடந்து வருகிறது. இந்த திட்டம் சென்னை மாதவரம் சிப்காட், கலங்கரை விளக்கம் பூந்தமல்லி, மாதவரம் சோழிங்கநல்லூர் ஆகிய 3 வழித்தடங்களில் 118.9 கி.மீ. தூரத்துக்கு செயல்படுத்தப்பட உள்ளன.

இதற்காக சுரங்கப்பாதைகள், உயர்மட்ட பாதைகள், ரெயில் நிலையங்கள் அமைக்கும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகிறது. 2026ம் ஆண்டு முதல் 2ம் கட்ட மெட்ரோ ரெயிலை இயக்கவும் திட்டமிடப்பட்டு உள்ளது. முதலில் பகுதி வாரியாக பணிகள் முடிந்த பகுதிகளில் மெட்ரோ ரெயில் இயக்கப்பட உள்ளது.

2ம் கட்ட திட்டத்துக்கான டிரைவர் இல்லாத முதல் மெட்ரோ ரெயில் பூந்தமல்லியில் உள்ள மெட்ரோ ரெயில் டெப்போவிடம் கடந்த அக்டோபர் மாதம் ஒப்படைக்கப்பட்டது. மற்றொரு ரெயில் அடுத்த மாதம் வர உள்ளது. இதன் தயாரிப்பு பணிகள் ஆந்திர மாநிலம் ஸ்ரீ சிட்டியில் உள்ள உற்பத்தி ஆலையில் நடந்து வருகிறது.

டிரைவர் இல்லாத மேலும் 9 ரெயில்கள் அடுத்த ஆண்டு மார்ச் மாதத்துக்குள் வர உள்ளன. இதுகுறித்து மெட்ரோ ரெயில் அதிகாரிகள் கூறியதாவது:

முதல் கட்ட மெட்ரோ ரெயில் திட்டத்தில் டிரைவர்களுடன் கூடிய 4 பெட்டிகள் கொண்ட மெட்ரோ ரெயில் இயக்கப்படுகிறது. 2ம் கட்ட மெட்ரோ ரெயில் திட்டத்தில் டிரைவர் இல்லாத 3 பெட்டிகளுடன் கூடிய மெட்ரோ ரெயில் இயக்கப்பட உள்ளது. பயணிகளின் தேவையை பொருத்து அது 6 பெட்டிகளை கொண்டதாக மாற்றப்படும்.

டிரைவர் இல்லாத மெட்ரோ ரெயில் சோதனை ஓட்டம் கடந்த சில வாரங்களாக நடந்து வருகிறது. இதுவரை 50 சதவீத சோதனைகள் முடிந்துள்ளன. ரெயிலை இயக்கும் போது எந்த பிரச்சினையும் எழவில்லை.

நாங்கள் ரெயில்களின் அனைத்து பாகங்களையும் சரிபார்த்து வருகிறோம். ரெயிலின் வேகம், அது எவ்வாறு இயங்குகிறது என்பது குறித்து இந்த மாத இறுதியில் சோதனை செய்யப்படும்.

இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

## நெல்லை புதிய பஸ் நிலையம் அருகே இளம்பெண்ணை காரில் கடத்த முயன்ற 2 வாலிபர்கள் கைது

நெல்லை, நவ.8

நெல்லை டவுன் ரத வீதி கீழத்தெருவை சேர்ந்தவர் பாலகிருஷ்ணன். இவரது மகள் சப்பானி என்ற அனுசியா (வயது 28). இவர் நெல்லை புதிய பஸ் நிலையம் அருகே உள்ள பாஸ்போர்ட் அலுவலகத்தில் பணியாற்றி வருகிறார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் அலுவலகத்தில் வேலையை முடித்துவிட்டு புறப்பட்ட அனுசியாவை அந்த வழியாக காரில் வந்த 4 பேர் கும்பல் கடத்த முயற்சி செய்தது. உடனே சுதாரித்துக் கொண்ட அனுசியா கத்தி கூச்சலிட்டார்.

இதனை கண்ட அக்கம் பக்கத்தினர் பார்த்து ஓடி வந்தனர். தகவல் அறிந்து வந்த மேலப்பாளையம் போலீசார் காரில் வந்த 4 பேரை பிடிக்க முயற்சித்த நிலையில் 2 பேர் தப்பி ஓடிவிட்டனர். பிடிபட்ட 2 பேரையும் போலீஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்று நடத்திய விசாரணையில் அவர்கள் டவுன் விளாகத்தை சேர்ந்த மணிகண்டன் ( 34), செய்துங்கநல்லூர் அருகே உள்ள அய்யனார்புரத்தைச் சேர்ந்த ஞானமூர்த்தீஸ்வரர்( 22) என்பது தெரியவந்தது.


இதில் மணிகண்டன் கடந்த 3 ஆண்டுகளாக அனுசியாவை காதலித்து வந்ததும் தெரிய வந்தது. மேலும் சம்பவத்தன்று அனுசியாவை கடத்திச் சென்று திருமணம் செய்வதற்கு மணிகண்டன் முயற்சி செய்ததும் விசாரணையில் தெரியவந்தது.

இதையடுத்து 2 பேரையும் போலீசார் கைது செய்தனர். தப்பியோடிய அவரது கூட்டாளிகளான மாரிச்செல்வம் மற்றும் ஒரு வாலிபரை போலீசார் வலைவீசி தேடி வருகின்றனர்.

## நொகனூர் வனப்பகுதியில் 20 யானைகள் முகாம் கிராம மக்களுக்கு வனத்துறை எச்சரிக்கை

தேன்கனிக்கோட்டை, நவ.8

கடந்த வாரம் பன்னார்கட்டா வனப்பகுதியிலிருந்து 50 யானைகள் தளி வனப்பகுதி வழியாக ஜவளகிரி வனச்சரகத்திற்கு வந்துள்ளன. அதில் 30 யானைகள் தேன்கனிக்கோட்டை வனப்பகுதிக்குள் நகர்ந்துள்ளன.



அதில் 20 யானைகள் தேன்கனிக்கோட்டை அருகே உள்ள நொகனூர் வனப்பகுதியில் 20 யானைகள் குட்டிகளுடன் முகாமிட்டுள்ளன. அருகில் உள்ள நொகனூர் வனப்பகுதி, அலஹள்ளி, தாவரகரை அகிய வனப்பகுதியில் 3 பிரிவுகளாக பிரிந்து முகாமிட்டுள்ளன.

காட்டு யானைகள் அருகில் நொகனூர், மரகட்டா, ஆலஹள்ளி, அயன்புரிதொட்டி, தாவரகரை, மலசோனை, கண்டகாணப்பள்ளி, ஏணி முச்சந்திரம், பூதுக்கோட்டை, சந்தனப்பள்ளி, தல்சூர், குருபட்டி உள்ளிட்ட கிராமங்களில் இரவு நேரங்களில் புகுந்து, அவரை, துவரை, தக்காளி, முட்டைகோஸ், பீன்ஸ் ஆகிய பயிர்களை கூட்டம் கூட்டமாக வந்து தின்று நாசம் செய்கின்றன.

இந்நிலையில் தேன்கனிக்கோட்டை வனச்சகர அலுவலர் விஜயன் தலைமையில் 40 பேர் கொண்ட குழுவினர் நொகனூர் வனப்பகுதியில் முகாமிட்டுள்ள யானை கூட்டத்தை கண்காணித்து விரட்டும் பணியில் ஈடுபட்டனர்.

வனத்துறையினர் ட்ரோன் மூலம் யானைகள் நடமாட்டம் கண்காணித்து வருகின்றன. விவசாய நிலங்கள், தோட்டங்களுக்கு செல்ல வேண்டாம் என்று எச்சரிக்கை விடுத்துள்ளனர். மேலும் யானைகள் நடமாட்டம் குறித்து தகவலை உடனடியாக வனத்துறைக்கு தெரிவிக்க வனத்துறை கேட்டுக்கொண்டு உள்ளனர்.

# வால்பாறையில் ஊருக்குள் புகுந்த 2 சிறுத்தைகள் கண்காணிப்பு கேமராவில் பதிவு

வால்பாறை, நவ.8

வால்பாறை பகுதியில் பொதுவாக பனிக்காலம் தொடங்கும் நிலையில் அங்கு சிறுத்தைகள் நடமாட்டம் அதிகமாக காணப்படும். மேலும் வனப்பகுதியில் இருந்து வெளியேறி ஊருக்குள் வரும் சிறுத்தைகள் அங்குள்ள வீடுகளில் வளர்க்கப்படும் நாய், கோழி, ஆடு போன்றவைகளை வேட்டையாடி தின்றுவிட்டு தப்பி செல்வது வழக்கம்.




வால்பாறை கூட்டுறவு காலனி, துளசிங்க நகர், காமராஜர் நகர், அண்ணா நகர் ஆகிய குடியிருப்பு பகுதிகளில் தற்போது சிறுத்தை நடமாட்டம் அதிகரித்து வருகிறது. இந்நிலையில்வனத்தில்இருந்து வெளியேறிய 2 சிறுத்தைகள் தேயிலைத் தோட்டத்தில் இருந்து குடியிருப்புக்குள் நுழைந்தன. பின்னர் அங்குள்ள சாலையில் சிறிது நேரம் படுத்து ஓய்வெடுத்தன. தொடர்ந்து 2 சிறுத்தைகளும் தங்களுக்குள் செல்ல சண்டை போட்டு விளையாடின. பின்னர் அவை மீண்டும் குடியிருப்பில் இருந்து வனப்பகுதிக்குள் சென்று மறைந்தன.

இந்த காட்சிகள் அங்குள்ளவீட்டில்பொருத்தப்பட்டுஉள்ளகண்காணிப்பு கேமராவில் பதிவாகி உள்ளன. இந்த காட்சிகள் தற்போது இணையத்தில் வைரலாகி வருகிறது.

# பா.ம.க.வினர் போலீசாருடன் வாக்கு வாதம்: தாலுகா அலுவலகத்தை முற்றுகையிட முயற்சி

திண்டிவனம், நவ.8

கடலூர் மாவட்டம் புவனகிரி மஞ்ச கொல்லை கிராமத்தில் வன்னியர் சமூகத்தை சேர்ந்த வாலிபர் ஒருவரை வழிமறித்து குறிப்பிட்ட ஒரு சமூகத்தை சார்ந்தவர்கள் குடிபோதையில் அந்த வாலிபரை கடுமையாக அடித்தும், காலால் முகத்தில் உதைத்தும் அராஜகம் செய்தாக கூறப்படுகிறது.

அந்த வாலிபர் கடுமையாக உடல் நலம் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கபட்டார். வாலிபரை தாக்கியவர்கள் மீது நடவடிக்கை எடுக்க கோரி பா.ம.க.வினர் சாலை மறியல் செய்தனர்.



இந்த நிலையில் வன்னியர் சமூக மக்களிடம் ஏற்பட்டபதட்டத்தைதணிக்க அப்பகுதிக்கு சென்று வன்னியர் சங்க தலைவர் பு.தா.அருள்மொழி சமாதானம் செய்துள்ளார்.

ஆனால் விடுதலை சிறுத்தைகள் விநிர்வாகி ஒருவர்.தா. அருள்மொழியை கழுத்தை அறுத்து விடுவதாக கொலை மிரட்டல் விடுத்ததாக கூறப்படுகிறது. அது காணொளியாக முகநூலில் வலம் வந்தது.

இந்த நிலையில் வன்னியர் சங்க தலைவர் மீது கொலைமிரட்டல்விடுத்த அந்த நபர் மீது குண்டர் சட்டத்தில் கைது செய்து சிறையில் அடைக்க வேண்டும் என திண்டிவனம்தாலுகாஅலுவலகத்தை முற்றுகையிட்ட 200க்கும் மேற்பட்ட பா.ம.க.வினர் வந்தனர்.

அப்போது நூற்றுக்கும் மேற்பட்ட போலீசார் போராட்டம் செய்யவிடாமல் பா.ம.க.வினர் மற்றும் வன்னியர் சங்க நிர்வாகிகளை போலீசார் தடுத்ததால் அப்பகுதியில் கடும் தள்ளு முள்ளு ஏற்பட்டு திடீரென வாக்குவாதம் ஏற்பட்டது.

இதனால் அப்பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது. பாதுகாப்பு பணியில் நூற்றுக்கும் மேற்பட்ட போலீசார் அப்பகுதியில் குவிக்கப்பட்டுள்ளனர்.

# 27 வினாடிகளில் 52 பரத முத்திரைகள்: உலக சாதனை புத்தகத்தில் இடம்பிடித்த மாணவி

மேலசொக்கநாதபுரம், நவ.8

அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ் மாகாணத்தை சேர்ந்த சண்முகமணிநளினி தம்பதியின் மகள் சனா (வயது11). இவர் அமெரிக்காவில் பிறந்து வளர்ந்தவர். இருந்தபோதும் தாய் தந்தையர் தமிழகத்தை பூர்வீகமாக கொண்டவர்கள் என்பதால் தமிழக கலைகள் மீது சிறுமிக்கு மிகுந்த ஆர்வம் இருந்து வந்தது.




இதனால் தமிழகத்தின் பாரம்பரிய கலையான பரத நாட்டியம் கற்க ஆர்வம் கொண்டார். அதன்படி அவரது சொந்த ஊரான தேனி மாவட்டம் போடியில் கடந்த 2 ஆண்டுகளாக பரத நாட்டிய பயிற்சி பெற்றார்.

பரதநாட்டியம்பயின்று வரும் காலகட்டத்தில் பள்ளி படிப்பு கெடாமல் இருப்பதற்காக இங்குள்ள தனியார் ஆங்கில வழி கல்வியில் 5ம் வகுப்பு வரை பயின்று வந்தார்.

மேலும் பரத நாட்டியத்திலும் பல்வேறு திறமைகளை வெளிப்படுத்தி அசத்தினார். இதனையடுத்து உலக சாதனைக்காக பரத முத்திரைகள் செய்து அனைவரின் பாராட்டையும் பெற்றுள்ளார்.

இவர் 27 வினாடிகளில் 52 பரத முத்திரைகள் செய்து காட்டி விருக்ஷா உலக சாதனை புத்தகத்தில் இடம் பிடித்துள்ளார்.

அவருக்கு போடி முன்னாள் எம்.எல்.ஏ. லட்சுமணன் சான்றுகள் மற்றும் பதக்கங்கள், கேடயங்களை வழங்கி வாழ்த்தினார். முற்றிலும் தமிழ் பேசத் தெரியாத நிலையில் தமிழர்களின் பாரம்பரிய நாட்டியக் கலையான பரதநாட்டியம் பயில்வதற்கு அமெரிக்காவில் இருந்து போடி வந்து பரத முத்திரைகளில் உலக சாதனை படைத்து மீண்டும் அமெரிக்கா திரும்ப செல்ல உள்ளார்.

# களக்காட்டில் நீட் தேர்வுக்கு பயிற்சி பெற்று வந்த மாணவி தற்கொலை

களக்காடு, நவ.8

நெல்லை மாவட்டம் களக்காடு ஆற்றங்கரை தெருவை சேர்ந்தவர் மணிகண்டன். பாத்திர வியாபாரி. இவரது மகள் முத்து லெட்சுமி (வயது 17).

முத்துலெட்சுமி 12ம் வகுப்பு படித்துள்ளார். கடந்த ஆண்டு நீட் தேர்வு எழுதினார். ஆனால் அதில் தேர்ச்சி பெறவில்லை. இதையடுத்து மீண்டும் 2வது முறையாக நீட் தேர்வுக்கு பயிற்சி பெற்று வந்தார்.

இந்நிலையில் இன்று காலை அவர் வீட்டில் தூக்கில் தொங்கினார். இதைப் பார்த்த உறவினர்கள் அவரை மீட்டு சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதித்தனர். அங்கு அவர் இறந்தார்.

இதுபற்றி களக்காடு போலீசில் புகார் செய்யப்பட்டது. அதன்பேரில் போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணை நடத்தி வருகின்றனர்.

கடந்த சில நாட்களாக பெற்றோர் அவரை சரியாக படிக்கவில்லை என்று கண்டித்து வந்ததாக கூறப்படுகிறது. இதனால் மனம் உடைந்த முத்து லெட்சுமிதூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டது விசாரணையில் தெரியவந்தது.

இதுகுறித்து போலீசார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# எடப்பாடி பழனிசாமி தலைமையில் மாவட்ட செயலாளர்கள் கூட்டம்

சென்னை, நவ.8

அ.தி.மு.க. மாவட்ட செயலாளர்கள் கூட்டம் இன்று சென்னை ராயப்பேட்டையில் உள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது.


கூட்டத்துக்கு பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தலைமை தாங்கினார். இதில் மாவட்ட செயலாளர்கள் மற்றும் பிற மாநில செயலாளர்கள் கலந்துகொண்டனர்.



கூட்டத்தில், நடிகர் விஜய் புதிய அரசியல் கட்சி தொடங்கியது குறித்தும், அதனால் தேர்தலில் அ.தி.மு.க.வுக்கு பாதிப்பு வருமா? என்பது குறித்தும் ஆலோசிக்கப்பட உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. மேலும், தவெக தலைவர் விஜய் கூட்டணிக்கு அழைப்பு விடுத்திருப்பது குறித்தும் நிர்வாகிகளிடம் கருத்து கேட்கப்பட இருக்கிறது.

சட்டசபை தேர்தலுக்கு இன்னும் 1½ ஆண்டுகளே இருப்பதால், அது வரை மக்கள் பிரச்சனைகளை வெளியே கொண்டுவந்து போராட்டங்களை நடத்துவது குறித்தும் விவாதிக்கப்பட இருக்கிறது.

# மேட்டூர் அணை நீர்மட்டம் 106 அடியாக சரிவு



சேலம், நவ.8

காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்து வரும் மழையை பொறுத்து மேட்டூர்அணைக்கு நீர்வரத்து அதிகரித்தும், குறைந்தும் வந்து கொண்டு இருந்தது. கடந்த சில நாட்களாக மழை அதிகமாக இருந்ததால்அணைக்குநீர்வரத்து அதிகரித்து காணப்பட்டது. இதன் காரணமாக மேட்டூர் அணையின் நீர் மட்டம் 107 அடியாக உயர்ந்தது.

இந்த நிலையில் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழையின்தீவிரம்குறைந்ததால் நீர்வரத்தும் குறையதொடங்கியது. அணைக்கு வரும் தண்ணீரை விட அணையில் இருந்து அதிகளவில் திறந்து விடப்பட்டு வருவதால் மேட்டூர் அணையின் நீர் மட்டமும் குறைய தொடங்கியது.

இன்று காலை நிலவரப்படி மேட்டூர் அணையின் நீர்மட்டம் 106.92 அடியாக குறைந்து காணப்பட்டது. அணைக்கு வினாடிக்கு 10 ஆயிரத்து 566 கனஅடி தண்ணீர் நேற்று வந்து கொண்டு இருந்த நிலையில் அது இன்று 9 ஆயிரத்து 929 கனஅடியாக குறைந்து காணப்பட்டது. மேலும் காவிரி டெல்டா பாசனத்துக்கு 12 ஆயிரம் கனஅடியும், கிழக்கு, மேற்கு கால்வாய் பாசனத்துக்கு 600 கனஅடி தண்ணீரும் திறக்கப்பட்டு வருகிறது. தற்போது அணையில் 74.10 டி.எம்.சி. தண்ணீர் இருப்பு உள்ளது.

# திருப்பூர் போலீஸ் கமிஷனர் அலுவலகம் முன்பு பொதுமக்கள் மறியல் போராட்டம்

திருப்பூர், நவ.8

திருப்பூர் மாநகரில் போக்குவரத்து நெருக்கடியை சரி செய்யும் வகையில் மாநகர போலீசார் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றனர். அதன்படி சில மாதங்களுக்கு முன்பு புஷ்பா சந்திப்பு பகுதியில் 'பிரீ சிக்னல்' முறையை அமல் படுத்தினர். இது மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றது.

அதேபோல் தற்போது குமார் நகரில் சோதனை முறையில் போக்குவரத்து மாற்றத்தை போலீசார் மேற்கொள்ள நேற்று அமல்படுத்தினர். அதில் வளையங்காட்டில் இருந்து குமார் நகருக்கு வரும் வாகனங்களை தீயணைப்புத்துறை அலுவலகம் சிக்னல் அருகே திரும்பி செல்லும் (யூ டர்ன்) வகையிலும் அவிநாசி ரோட்டில் இருந்து வளையங்காடு செல்லும் வாகனங்கள் வழக்கம் போல் செல்லவும் அனுமதிக்கப்பட்டது.

அதேபோல் எஸ்ஏபி.யில் இருந்தும், குமார் நகரில் இருந்தும் 60 அடி ரோட்டுக்கு செல்லக்கூடிய வாகனங்கள் ஒரே வழியாக அனுமதிக்கப்பட்டன. அங்கேரிபாளையம் ரோட்டை ஒரு வழிபாதையாகவும் மாற்றியுள்ளனர். இந்தநிலையில் அங்கேரிப்பாளையம் சாலையை ஒரு வழிபாதையாக மாற்ற எதிர்ப்பு தெரிவித்து இன்று காலை 300க்கும் மேற்பட்ட பொதுமக்கள் பள்ளி மாணவர்களின் பெற்றோர்கள் திருப்பூர் மாநகர போலீஸ் கமிஷனர் அலுவலகம் முன்பு திடீர் சாலை மறியலில் ஈடுபட்டனர். அப்போது அங்கேரிபாளையம் சாலையில் 3 முக்கிய பள்ளிகள் செயல்படுவதாகவும் அங்கு படிக்கும் பல்லாயிரக்கணக்கான மாணவ மாணவிகளை பெற்றோர்கள் தான் தங்களது வாகனங்களில் கொண்டு விட்டுச்செல்கின்றனர். தற்போது ஒரு வழி பாதையாக மாற்றப்பட்டதால் மிகுந்த சிரமம் ஏற்படுவதாகவும், குறிப்பிட்ட நேரத்துக்கு பள்ளிக்கு குழந்தைகளை பள்ளியில் கொண்டு விடுவதற்கு முடியவில்லை. எனவே அங்கேரிப்பாளையம் சாலையை ஒருவழிப்பாதையாக மாற்றும் முயற்சியை உடனடியாக கைவிட வேண்டும் என போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இது குறித்த தகவல் கிடைத்ததும் சம்பவ இடத்திற்கு போலீசார் சென்று மறியலில் ஈடுபட்ட பொதுமக்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினர். அப்போது உயர் அதிகாரியிடம் பேசி மாற்று நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்ததின் பேரில் பொதுமக்கள் போராட்டத்தை கைவிட்டு கலைந்து சென்றனர். இதனால் அந்த பகுதியில் இன்று காலை சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

# நாட்டின் 2வது பொருளாதார மாநிலம் தமிழ்நாடு மு.க.ஸ்டாலின்

கோவை, நவ.8

கோவை மாவட்டம் அனுப்பர்பாளையத்தில் ரூ.300 கோடியில் மாபெரும் நூலகத்திற்கும், அறிவியல் மையத்திற்கும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார். இதைத் தொடர்ந்துமுதலமைச்சர் கூறியதாவது:

★ தங்க நகை வியாபாரிகள் பல கோரிக்கைகளை வைத்துள்ளனர். ரூ.126 கோடி செலவில் தங்க நகை உற்பத்திக்கு தொழில் வளாகம் அமைக்கப்படும். ஏராளமானோர் இதன் மூலம் வேலைவாய்ப்பு பெறுவார்கள்.

★ கோவைக்கு பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி உள்ளது திமுக அரசு.

★ கோவை கிரிக்கெட் மைதானம் அமைக்க விரைவில் பணிகள் தொடங்கும்.

★ கோவையில் புதிய தகவல் தொழில் நுட்ப மையம் அமைக்கப்படும். கோவை வளர்ச்சியில் புதிய மைல் கல்லாக தகவல் தொழில்நுட்ப மையம் அமையும்.

★சின்னியம்பாளையம் நீலாம்பூர் வரை உயர் மட்ட சாலை நீட்டிக்கப்படும்.

★ ரூ.26 கோடி செலவில் கூட்டுக்குடிநீர் திட்டம் மேம்படுத்தப்படும்.

★ ரூ.200 கோடி செலவில் மண் சாலைகள் தார் சாலைகளாக தரம் உயர்த்தப்படும்.

★ மனித விலங்கு மோதல் தடுக்க ரூ.7 கோடி மதிப்பில் யானைகள் உள்ளே வராத அளவிற்கு வேலி அமைக்கப்படும்.

★ நவீன தமிழ்நாட்டை உருவாக்கியது திமுக அரசு.

★ நாட்டின் 2வது பொருளாதார மாநிலம் தமிழ்நாடு. பல்வேறு துறைகளில் தமிழ்நாடு முன்னிலையில் உள்ளது.

★ வட மாநிலங்களுடன் ஒப்பிட்டு பார்த்தால் தமிழ்நாட்டின் வளர்ச்சி பற்றி தெரியும் என்று கூறினார்.

# நடிகை கஸ்தூரியிடம் விசாரணை நடத்த போலீசார் ஆலோசனை

சென்னை, நவ.8

சென்னை எழும்பூரில் இந்து மக்கள் கட்சி சார்பில் பிராமணர்களை பாதுகாப்பதற்காக வன்கொடுமை தடுப்பு சட்டத்தை போல புதிய சட்டத்தை கொண்டு வர வேண்டும் என்று வலியுறுத்தி அக்கட்சியின் தலைவர் அர்ஜுன் சம்பத் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு பேசிய நடிகை கஸ்தூரி தெலுங்கு பேசும் பெண்கள் பற்றி அவதூறான கருத்துக்களை கூறியதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அவர் மீது பல்வேறு போலீஸ் நிலையங்களில் புகார் அளிக்கபட்டுள்ளது. அனைத்து தெலுங்கு சங்கம் சார்பில் எழும்பூர் போலீசில் புகார் அளிக்கப்பட்டது.

இதன்படி கஸ்தூரி மீது கலவரத்தை தூண்டுதல், 2 பிரிவினரிடையே மோதலை ஏற்படுத்துதல் உள்பட 4 பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து எழும்பூர்போலீசார்கஸ்தூரியிடம் விசாரணை நடத்த முடிவு செய்திருப்ப தாக தகவல்கள் வெளியாகி உள்ளன. அவருக்கு சம்மன் அனுப்புவது தொடர்பாகசட்டநிபுணர்களுடன் போலீசார் ஆலோசனை நடத்தி வருகிறார்கள்.

கஸ்தூரிக்கு சம்மன் அனுப்பி குறிப்பிட்ட நாளில் நேரில் வரவழைக்க போலீசார் முடிவு செய்திருப்பதாக தெரிகிறது.

இதற்கிடையே கஸ்தூரி தனதுகருத்துக்கள்அனைத்தையும் திரும்ப பெறுவதாகவும், மன்னிப்பு கேட்பதாகவும் கூறியிருக்கிறார். இது பற்றியும் ஆலோசித்து வருவதாக போலீஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

# எழும்பூர் ரெயில் நிலையத்தில் செயல்படாத நகரும் படிக்கட்டுகள் இயங்கின பயணிகள் மகிழ்ச்சி

சென்னை, நவ.8

சென்னை எழும்பூர் ரெயில் நிலையத்தின் மேற்கு பகுதியில், பயணிகள் வெளியில் இருந்து நேரடியாக நடைமேம்பாலத்தில் ஏறும் வகையிலும், இறங்கும் வகையிலும் அமைக்கப்பட்டுள்ள 2 நகரும் படிக்கட்டுகளும் பெரும்பாலான நேரங்களில் நகராமல் நிற்பதால் பயணிகள் பெரிதும் அவதிப்படுகின்றனர்.



அதேபோன்று, 5 முதல் 9வது வரையிலான நடைமேடைகளில் உள்ள நகரும்படிக்கட்டுகளும்பல நேரங்களில் நகராமல் தான் நிற்கின்றன. மேலும், 10வது நடைமேடையில் உள்ள நகரும்படிக்கட்டும், ரெயில் நிலையத்தின் பின்பகுதியில் கிழக்குப்பகுதி நடைமேம்பாலத்திற்கு செல்வதற்கான நகரும் படிக்கட்டும் நீண்ட நாட்களாக இயங்காமல் பராமரிப்பு இன்றி கிடக்கின்றன.

இதனால், பயணிகள் கடும் அவதி அடைகின்றனர் என்று 'தினத்தந்தி' பத்திரிகையில் நேற்று முன்தினம் செய்தி வெளியிடப்பட்டது.

இந்த நிலையில், எழும்பூர் ரெயில் நிலையத்தின் பின்பகுதியில் கிழக்குப்பகுதி நடைமேம்பாலத்திற்கு செல்வதற்கான நகரும் படிக்கட்டு ஒன்றைத் தவிர அனைத்து நகரும் படிக்கட்டுகளும் நேற்று முறையாக இயக்கின. இதனால், நகராமல் நின்ற நகரும் படிக்கட்டுகள் நகர்வதைப் பார்த்த ரெயில் பயணிகள் பெரிதும் மகிழ்ச்சி அடைந்ததுடன், நடைமேடைகளில் இருந்து நடைமேம்பாலத்திற்கு நகரும் படிக்கட்டுகளில் ஏறி எளிதாக பயணித்தனர்.

எழும்பூர் ரெயில் நிலையத்தின் பின்பகுதியில் கிழக்குப் பகுதி நடைமேம்பாலத்திற்கு செல்வதற்கான நகரும் படிக்கட்டானது, அம்ரித் பாரத் ஸ்டேஷன் திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட இருப்பதால் அந்த ஒரு நகரும்படிக்கட்டு மட்டும் பின்னர் செயல்படும் என்று ரெயில்வே அதிகாரிகள் தெரிவித்து உள்ளனர்.

# கள்ளக்காதல் விவகாரத்தில் வாலிபருக்கு கத்தியால் வெட்டு

மத்தூர், நவ.8

கிருஷ்ணகிரி மாவட்டம் மத்தூர் அருகே உள்ள மாட மாடரஅள்ளி, அண்ணா நகர் பகுதியை சேர்ந்த பூங்காவனம் என்பது மகன் வீரா (வயது 33).

இவர் கர்நாடக மாநிலம் பெங்களூரு பகுதியில் உள்ள செயின்ட் ஜான்சன் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மருந்தாளுனராக வேலை செய்து வருகின்றார்.

தீபாவளி பண்டிகைக்காக விடுமுறையில் வீரா சொந்த ஊருக்கு வந்தார்.

அதே பகுதியைச் சேர்ந்தவர் தொழிலாளி வேலு. இவருடைய மனைவிக்கும், வீராவிற்கும், கள்ள தொடர்பு இருப்பதாக கூறி நேற்று வேலு விடுமுறையில் ஊருக்கு வந்த வீராவிடம் தகராறில் ஈடுபட்டார்.



இதில் ஆத்திரமடைந்த வேலு தான் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து வீராவை சரமாரியாக வெட்டி உள்ளார். இதில் வீராவிற்கு கை, விரல்கள், தலை, கண் ஆகியபகுதிகளில்வெட்டு காயம்ஏற்பட்டுரத்தவெள்ளத்தில் அதே இடத்தில் மயங்கி கீழே விழுந்தார். அப்போது வீராவின் அலறல் சத்தம் அவரது உறவினர்கள் ஓடிவந்தனர். அதற்குள் வேலு அங்கிருந்து தப்பி ஓடிவிட்டார்.

உடனே வீராவை உறவினர்கள் உடனடியாக மீட்டு மத்தூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தனர். அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக கிருஷ்ணகிரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது.

இதுகுறித்து வீரா மத்தூர் போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தார். புகாரின் பேரில் போலீசார் வழக்கு பதிவு செய்து தலைமறைவாக உள்ள வேலுவை தேடி வருகின்றனர்.

# குமரியில் குளமாக மாறிய உப்பளங்கள்; உப்பு உற்பத்தி கடும் பாதிப்பு



கன்னியாகுமரி, நவ.8

குமரி மாவட்டத்தில் சாமிதோப்பு, புத்தளம், கோவளம், மணக்குடி மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் சுமார் ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் உப்பளங்கள் அமைக்கப்பட்டு உப்பு உற்பத்தி தொழில் நடைபெற்று வருகிறது. இதனை நம்பி ஆயிரக்கணக்கான உப்பு உற்பத்தி தொழிலாளர்கள் வேலைசெய்து வருகின்றனர்.

இங்கு உற்பத்தி செய்யப்படும் உப்புகள் கேரளா உள்ளிட்ட பல்வேறு பகுதிகளுக்கும், வெளிநாடுகளுக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது. இந்தநிலையில் கடந்த சில நாட்களுக்கு முன்பு இடைவிடாது கொட்டித் தீர்த்த கனமழையின் காரணமாக உப்பளங்களில் வெள்ளம் சூழ்ந்து குளம் போல் காட்சியளிக்கிறது.

இதனால் உப்பு உற்பத்தி செய்ய முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் கடந்த காலங்களை போல நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் குமரி மாவட்டத்தில் தொடர் மழை இருக்கும் என உப்பு உற்பத்தியாளர்களால் எதிர்பார்க்கப்படுகிறது.

இதன் காரணமாக குமரி மாவட்டத்தில் புத்தளம், சாமி தோப்பு மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் உப்பு உற்பத்தி தொழில் பாதிப்படைந்துள்ளது. இதனால் உப்பளங்கள் அனைத்தும் தொழிலாளர்கள் இல்லாமல் வெறிச்சோடி காணப்படுகிறது. மேலும் தொழிலாளர்களின் வாழ்வாதாரமும் பாதிக்கப்பட்டுள்ளது.

இதனால் உப்பு உற்பத்தியாளர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் மத்திய, மாநில அரசுகள் நிவாரண உதவி வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.

# செங்கல்பட்டு ஊராட்சி குளங்களில் 4 லட்சம் நாட்டு இன மீன்கள் வளர்ப்பு



மாமல்லபுரம், நவ.8

செங்கல்பட்டு மாவட்ட ஊரக வளர்ச்சித்துறையின் கீழ் ஊராட்சிப் பகுதிகளில் உள்ள குளம், ஏரிகளில் நாட்டு இன மீன் வகைகளான ரோகு, கட்லா, மிர்கால் ஆகியவற்றின் குஞ்சுகளை விட்டு, நாட்டு இன மீன்கள் அழியாமல் பாதுகாத்து வருகின்றனர்.

மாவட்டத்திற்கு உட்பட்ட பகுதிகளில் மீன் உற்பத்தியை பெருக்கும் வகையில் மீன் வளத்துறையுடன் இணைந்து செயல்படுத்தி வருகின்றனர்.

இதன்படி வட்டார வளர்ச்சி கட்டுப்பாட்டில் உள்ள நீர்நிலைகளில் மீன் குஞ்சுகள் இருப்பு வைக்கப்படுகிறது., செங்கல்பட்டு மாவட்டத்தில் 500 ஏக்கர் பரப்பளவு நீர்நிலைகளில் மீன் குஞ்சிகள் இருப்பு வைக்க நிர்ணயிக்கப்பட்டுள்ளது அதன்படி மீன்வளத்துறை, மாவட்ட மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை சார்பில், 4லட்சம் மீன் குஞ்சுகளை இருப்பு வைக்க தயாராகி வருகிறது.

அதற்காக ஆத்தூர் மீன் வளபண்ணையில்இருந்து கட்லா, ரோகு, மிர்கால் வகை மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது., முதல்கட்டமாக மீன் குஞ்சிகளை செங்கல்படாடு மாவட்ட சப்கலெக்டர் நாராயணசர்மா திருக்கழுக்குன்றம் அடுத்த அகஸ்தீஸ்வரமங்கலத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட குளத்தில் 26 ஆயிரம் குஞ்சுகளை விட்டு திட்டத்தை தொடக்கி வைத்தார்.

மீன்வளத்துறை உதவி இயக்குனர் ஜனார்த்தனன், ஒன்றியக் குழு தலைவர் ஆர்.டி.அரசு உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இவ்வகை மீன்கள் 7 மாதங்களில் வளர்ந்ததும் அதை பொது ஏலம் விட்டு பிடித்து விற்க்கும் போது கட்லா வகை கிலோ ரூ.220க்கும், ரோகு வகை ரூ.190க்கும், மிர்கால் 180க்கும் விலை போகும் என கூறப்படுகிறது.

# கால்நடைகளை தொடர்ந்து தாக்கி கொன்று வரும் சிறுத்தை



தாளவாடி, நவ.8

ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் புலிகள் காப்பகம் தாளவாடி வனச்சரகத்திக்கு உட்பட்ட சூசைபுரம், தொட்டகாஜனூர், பீம்ராஜ்நகர், ஒசூர் பகுதியில் கடந்த 2 வருடங்களாகஅங்கு உள்ள கல்குவாரியில் பதுங்கி உள்ள சிறுத்தை ஆடு, மாடு, காவல் நாய்களையும் தாக்கி கொன்று வருவது தொடர்கதையாகி வருகிறது.

இதனால் அப்பகுதி மக்கள் அச்சம் அடைந்து வந்தனர். தொடர்ந்து ஆடு மற்றும் நாய்களை வேட்டையாடிய சிறுத்தை அங்கு உள்ள கல்குவாரியில் சென்று பதுங்கி கொள்வதும் வாடிக்கையாகி விட்டது.

இந்நிலையில் தொட்ட காஜனூர் கிராமத்தைச் சேர்ந்தவர் ராசப்பா (42) விவசாயி. 4 மாடுகள், 5 ஆடுகள் வளர்த்து வருகிறார். வழக்கம் போல் வீட்டின் முன் உள்ள கொட்டகையில் கட்டி வைத்து விட்டு தூங்க சென்றுவிட்டார். காலைவந்து பார்த்த போது தனது ஆடு ஒன்று பாதி உடலை தின்ற நிலையில் இறந்து கிடந்து.

இது பற்றி உடனடியாக தாளவாடி வனத்துறைக்கு தகவல் அளித்தனர். சம்பவ இடத்துக்கு வந்த வனத்துறை அங்கு பதிவாகி இருந்த கால் தடத்தை ஆய்வு செய்தனர். இதில் கல்குவாரியில் இருந்து வந்த சிறுத்தை ஆட்டை கடித்துக் கொன்றது தெரியவந்தது.

இது குறித்து இப்பகுதி மக்கள் கூறும் போது, கடந்த 2 வருடமாக இங்கு உள்ள கல்குவாரியில் பதுங்கி இருக்கும் சிறுத்தை அவ்வபோது வெளியே வந்து நாங்கள் வளர்த்து வரும் ஆடு, மாடு, நாய்களை தொடர்ந்து வேட்டையாடி வருகிறது. இதனால் கல்குவாரி பகுதியை கடந்து செல்லவே பொதுமக்கள் அச்சப்பட்டு வருகிறோம். இதுவரை 50க்கும் மேற்பட்ட கால்நடைகளை சிறுத்தை கொன்றுள்ளது. தொடர்ந்து அட்டகாசம் செய்து வரும் சிறுத்தையை கூண்டு வைத்துப் பிடிக்க வேண்டும் என்றனர்.

# தி.மு.க.அ.தி.மு.க. மோதலில் 19 பேர் கைது: பதட்டம் நீடிப்பு

ஜெயங்கொண்டம், நவ.8

அரியலூர் மாவட்டம் ஜெயங்கொண்டம் அருகே உள்ள குவாகம் கிராமம் வெற்றி தெருவை சேர்ந்தவர் கொளஞ்சி. இவரது மனைவி தேவகி (வயது 40). குவாகம் ஒன்றிய அ.தி.மு.க. முன்னாள் கவுன்சிலர். அதே பகுதியை சேர்ந்தவர்காமராஜ். அவரது மனைவி சரோஜா (55) குவாகம் ஒன்றிய தி.மு.க. கவுன்சிலர்.

கொளஞ்சி மற்றும் காமராஜ் ஆகியோருக்கு இடையே அரசியல் முன்பகை இருந்து வந்தது. கொளஞ்சி வீட்டின் எதிர்ப்புறம் மாரியம்மன் கோவில் ஒன்று உள்ளது அதன் அருகே ஒரு காலி மனை உள்ளது.

இந்த மனையில் இரண்டு மாதங்களுக்கு முன்பு கொளஞ்சி மண் கொட்டினார். அப்போது காமராஜ் அந்த இடம் கோவிலுக்கு சொந்தமானது எனக் கூறி மண் கொட்ட எதிர்ப்பு தெரிவித்தார். அதன் தொடர்ச்சியாக இரு தரப்பினருக்கும் அடிக்கடி தகராறு ஏற்பட்டு வந்தது.

இது குறித்து குவாகம் போலீசார் வழக்கு பதிவு செய்தனர். மேலும் உடையார்பாளையம் உதவி கலெக்டர் அலுவலகத்தில் பேச்சு வார்த்தையில் நடந்தது. அதில் பிரச்சனைக்குரிய இடம் கொளஞ்சிகே சொந்தம் என உதவி கலெக்டர் உத்தரவிட்டார். இதனால் கொளஞ்சி நேற்று காலிமனையில் மண் நிரவ ஆரம்பித்தார். அப்போது மீண்டும் இரு தரப்புக்கும் இடையே தகராறு ஏற்பட்டு மோதலாக மாறியது.

தகவல் அறிந்த குவாகம் போலீஸ் இன்ஸ்பெக்டர் மணிவண்ணன் தலைமையிலான போலீசார் சம்பவ இடம் விரைந்து வந்தனர். அப்போது போலீசாரின் முன்னிலையில் இரு தரப்பினரும் மாறி மாறி கல்லால் தாக்கி கொண்டனர். அப்போது கொளஞ்சி மற்றும் அவரது தரப்பைச் சேர்ந்த நபர்களின் வீடுகள் மீது நாட்டு வெடிகுண்டுகள் வீசப்பட்டது. மேலும் வீடுகள், 4 பைக்குகள் ஒரு கார் அடித்து நொறுக்கப்பட்டன. உடனே போலீசார் இருதரப்பை சேர்ந்த 20க்கும் மேற்பட்டவர்களை பிடித்து போலீஸ் நிலையத்திற்கு அழைத்து சென்றனர்.

சம்பவ இடத்தில் மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு செல்வராஜ், துணை போலீஸ் சூப்பிரண்டு ரகுபதி ஆகியோர் பார்வையிட்டு விசாரணை நடத்தினர். பின்னர் தாக்குதலில் வெடித்த, வெடிக்காத நாட்டு வெடிகுண்டுகளை தடயவியல் நிபுணர் குமாரவேல் தலைமையிலான போலீசார் கைப்பற்றி விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்த மோதலில் கொளஞ்சி மனைவி தேவகி, காமராஜ் மனைவி சரோஜா ஆகியோர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். இதில் காயம் அடைந்த இருதரப்பை சேர்ந்த 5 பெண்கள் உட்பட 7 பேர் ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை பெற்று திரும்பினர்

இந்த சம்பவத்தில் பாதிக்கப்பட்ட கொளஞ்சி தரப்பில் கந்தசாமி, தனவேல், அனிதா, ஆனந்தி ஆகிய 4 பேர் கைது செய்யப்பட்டனர்.

காமராஜ் தரப்பில் காமராஜ், திரிசங்கு, பாலச்சந்திரன், சங்கர், பரமசிவம், சூர்யா, உட்பட 15 பேர் மீது போலீசார் வழக்கு பதிவு செய்து கைது செய்தனர். இந்த சம்பவம் அந்த கிராமத்தில் பெரும் பதட்டத்தை ஏற்படுத்தி உள்ளது. மேலும் மோதலை தவிர்ப்பதற்காக அங்கு போலீசார் குவிக்கப்பட்டு உள்ளனர்.

# லக்கி பாஸ்கர் படத்தின் விதி மாறுதா பாடல் வெளியீடு




தமிழ், மலையாளம் மற்றும் தெலுங்கு உள்ளிட்ட தென்னிந்தியமொழிகளில்முன்னணிநடிகராகவலம்வருபவர் நடிகர்துல்கர்சல்மான்.இவர்மலையாளநடிகராகஇருந்தாலும், இவரது திரைப்படங்களுக்கு தென்னிந்திய மொழிகளில் அதிக வரவேற்பு கிடைப்பது வழக்கமாகும். அவரது நடிப்பில் வெளியான "சீதா ராமம்" திரைப்படம் ஏகபோக வரவேற்பை பெற்றது. இதையடுத்து அவர் நடித்த "கிங் ஆப் கோதா" திரைப்படம் எதிர்பார்த்த வெற்றி அடையவில்லை. இதைத் தொடர்ந்து துல்கர் சல்மான் நடிப்பில் உருவாகி இருக்கும் புதிய திரைப்படம் தான் "லக்கி பாஸ்கர்".

வெங்கி அட்லுரி இத்திரைப்படத்தை இயக்கி உள்ளார். இந்தப் படத்தை சித்தாரா என்டர்டெயின்மென்ட் நிறுவனமும் பார்ச்சூன் போர் சினிமாஸ் நிறுவனமும் இணைந்து தயாரிக்கிறது. இதில் துல்கர் சல்மான் உடன் இணைந்து மீனாட்சி சவுத்ரி நடிக்கிறார். ஜி.வி பிரகாஷ் இதற்கு இசை அமைத்துள்ளார். தீபாவளி வெளியீடாக அக்டோபர் 31ம் தேதி வெளியான இப்படம் ரசிகர்களிடம் பெரிய வரவேற்பைப் பெற்றுள்ளது.

சாதாரண நபரான நாயகன் அரசு மற்றும் வங்கி நிர்வாகத்தை ஏமாற்றி பெரும் செல்வந்தனாக மாறும் கதையாக உருவான இப்படம், தெலுங்கு மற்றும் மலையாளத்தை முதன்மையாகக் குறிவைத்து உருவானாலும் தமிழிலும் கவனிக்கப்பட்டு வருகிறது. இப்படம் வசூல் ரீதியாகவும், விமர்சனம் ரீதியாகவும் நல்ல வரவேற்பை பெற்று வருகிறது. சமீபத்தில் 'லக்கி பாஸ்கர்' படத்தின் 'கொல்லாதே' பாடல் வெளியாகி வைரலானது. இந்த நிலையில் தற்போது இப்படத்தின் 'விதி மாறுதா' என்ற லிரிக் பாடல் வெளியாகி உள்ளது.

# அமரன் படக்குழுவினரை பாராட்டிய அனிருத்




நடிகர் சிவகார்த்திகேயன் நடிப்பில் உருவான 'அமரன்' திரைப்படம் தீபாவளி வெளியீடாக அக்டோபர் 31ம் தேதி திரையரங்குகளில் வெளியானது. இந்தப் படத்தை நடிகர் கமல்ஹாசனின்ஆர்கேஎப்ஐதயாரிப்புநிறுவனம் தயாரித்துள்ளது. மறைந்த தமிழக ராணுவ மேஜர் முகுந்த் வரதராஜனின் வாழ்க்கையைத் தழுவி எடுக்கப்பட்ட இப்படம் ரசிகர்களிடம் பெரிய வரவேற்பைப் பெற்றுள்ளது. இதில் சிவகார்த்திகேயன் மேஜர் முகுந்தாகவும், முகுந்தின் மனைவி இந்துவாக நடிகை சாய் பல்லவியும் நடித்துள்ளனர்.

உலகளவில் கிட்டதட்ட 900க்கும் மேற்பட்ட திரையரங்குகளில் 'அமரன்' திரைப்படம் வெளியாகின. திரையிட்ட இடங்களில் எல்லாம் அமரன் படத்திற்கு மகத்தான வரவேற்பு கிடைத்துள்ளது. இந்த படத்தை திரைப் பிரபலங்கள் உள்ளிட்ட அனைவரும் பாராட்டி வருகின்றனர்.இத்திரைப்படம் வெளியான முதல் நாளில் உலகளவில் ரூ.42.3 கோடி வசூலித்துள்ளதாக படக்குழு அறிவித்தது.

இந்தநிலையில் 'அமரன்' திரைப்படத்தை பார்த்த இசையமைப்பாளர் அனிருத் அவரது எக்ஸ் தளத்தில் பாராட்டி பதிவிட்டுள்ளார். அதில் "அமரன் சிறந்த சினிமாவாக உள்ளது. முன்பு எப்போதும் இல்லாத அளவுக்கு சிவகார்த்திகேயனை நினைத்து பெருமையாக உள்ளது. என் சகோதரர் ராஜ்குமார் பெரியசாமி மற்றும் படக்குழுவை சேர்ந்த அனைவருக்கும் மனமார்ந்த வாழ்த்துக்கள்," என்று குறிப்பிட்டுள்ளார்.

# இன்று வெளியாகும் 'தக் லைப்' படத்தின் ரிலீஸ் அப்டேட்

36 வருடங்களுக்குப் பிறகு கமல்ஹாசன் மணிரத்னம் கூட்டணியில் உருவாகியுள்ள படம் 'தக் லைப்'. இப்படத்தில் திரிஷா, சிம்பு, ஜோஜு ஜார்ஜ், ஐஸ்வர்யா லட்சுமி, கவுதம் கார்த்திக் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். இசைப்புயல் ஏ.ஆர்.ரகுமான் இசையமைத்திருக்கிறார்.

ராஜ்கமல் பிலிம்ஸ் இன்டர்நேஷனல், மெட்ராஸ் டாக்கீஸ், ரெட் ஜெயன்ட் மூவிஸ் இணைந்து தயாரித்துள்ள இப்படத்தின்படப்பிடிப்புசமீபத்தில்நிறைவடைந்தது. இதனைபடக்குழு வீடியோவெளியிட்டு தெரிவித்திருந்தது. இதனையடுத்து இப்படம் எப்போது திரைக்கு வரும் என்ற எதிர்பார்ப்பில் ரசிகர்கள் உள்ளனர்.

இந்தநிலையில், படக்குழு புதிய போஸ்டர் ஒன்றை வெளியிட்டு தக் லைப் படம் குறித்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது. இந்த நிலையில், கமல்ஹாசன் பிறந்தநாளை முன்னிட்டு நாளை (நவ. 7) காலை 11 மணிக்கு படத்தின் வெளியீட்டுத் தேதிக்கான டீசரை வெளியிட தயாரிப்பு நிறுவனம் முடிவு செய்துள்ளது.

# ஆஸ்திரேலியாவில் ரோகித், கோலி சொதப்புவதற்கு அதிக வாய்ப்பு மைக்கெல் வாகன்




நியூசிலாந்து அணிக்கு எதிராக சொந்த மண்ணில் நடைபெற்ற மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை ரோகித் சர்மா தலைமையிலான இந்திய அணி இழந்தது அனைவரது மத்தியிலும் அதிருப்தியை ஏற்ப்படுத்தி உள்ளது.

அதோடு இந்த தொடரின் மோசமான தோல்வி காரணமாக உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் தொடரின் இறுதிப் போட்டிக்கு செல்லும் வாய்ப்பும் தற்போது இக்கட்டான நிலையில் உள்ளது. ஆஸ்திரேலியா தொடரில் இந்திய அணி 3 அல்லது 4 போட்டிகளில் வெற்றி பெற்றால் மட்டுமே உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் தொடரின் இறுதி போட்டிக்கு செல்லும்.

ரோகித் மற்றும் விராட் கோலி கடைசியாக விளையாடி 6 இன்னிங்ஸ்களில் 100 ரன்களை கூட கடக்கவில்லை. இந்நிலையில் எதிர்வரும் ஆஸ்திரேலிய தொடரில் அவர்கள் சிறப்பாக கம்பேக் கொடுத்தாலும் மூன்று வேகப்பந்து வீச்சாளர்கள் அவர்களை பயமுறுத்த காத்திருப்பார்கள் என இங்கிலாந்து அணியின் முன்னாள் கேப்டன் மைக்கெல் வாகன் கூறியுள்ளார்.

இது குறித்து அவர் கூறியதாவது:

விராட் கோலி மற்றும் ரோகித் சர்மா ஆகியோரால் ரன்களை குவிக்க முடியும் என்கிற நம்பிக்கை எனக்கு உள்ளது. ஆனாலும் ஆஸ்திரேலிய மண்ணில் அவர்கள் சொதப்பதற்கு வாய்ப்பும் அதிகமாக இருக்கிறது. ஏனெனில் ஆஸ்திரேலியா போன்ற வேகப்பந்து வீச்சுக்கு சாதகமான மைதானங்களில் விளையாடுவது சாதாரண விஷயம் அல்ல.

அதிலும் குறிப்பாக பேட் கம்மின்ஸ், ஹசில்வுட், ஸ்டார்க் போன்ற உலகத் தரமான பந்துபந்துவீச்சாளர்கள் ஒன்று சேர்ந்து அட்டாக் செய்ய உள்ளனர். இதன் காரணமாக ரோகித் மற்றும் விராட் கோலி ஆகியோருக்கு இந்த விசயம் தற்போது ஆபத்தாக மாறியுள்ளது.

அந்த மூன்று பந்துவீச்சாளர்களையும் சமாளிக்க வேண்டும் என்றால் இருவருமே மிகச் சிறந்த மனநிலையில், சரியான டெக்னிக்குடன் விளையாட வேண்டும். அப்படி இல்லை என்றால் அவர்கள் இந்த தொடரிலும் தடுமாற அதிக வாய்ப்பு இருக்கும். இவ்வாறு மைக்கல் வாகன் கூறினார்.

# ஐபிஎல் மெகா ஏலத்தில் பங்கேற்கவுள்ள முதல் இத்தாலி வீரர்




ஐபிஎல் 2025 டி20 கிரிக்கெட் தொடர் வீரர்கள் ஏலம் நடைபெறும் தேதிகள் அறிவிக்கப்பட்டுள்ளது. இம்முறை அனைத்து அணிகளும் கலைக்கப்பட்டு மெகா ஏலம் நடைபெற உள்ளது.

அதற்கு முன்பாக அனைத்து 10 அணிகளும் தாங்கள் தக்க வைக்கும் வீரர்களின் பட்டியலை வெளியிட்டுள்ளன. இந்நிலையில் 2025 ஐபிஎல் ஏலத்தில் மொத்தம் 1574 வீரர்கள் பங்கேற்க உள்ளதாக பிசிசிஐ அறிவித்துள்ளது. 965 சர்வதேச கிரிக்கெட்டில் விளையாடாத புதுமுக இந்திய வீரர்களும் ஏலத்தில் பங்கேற்க உள்ளார்கள். அதே போல உலக அளவில் 104 சர்வதேச கிரிக்கெட்டில் விளையாடாத புதுமுக வீரர்களும் ஐபிஎல் ஏலத்தில் பங்கேற்க உள்ளார்கள்.

இந்நிலையில் முதல் முறையாக இத்தாலி நாட்டைச் சேர்ந்த தாமஸ் டிராகா இந்த ஏலத்தில் பங்கேற்க உள்ளார். 24 வயதான அவர், பல நாடுகளில் லீக் கிரிக்கெட் அனுபவம் பெற்றவர். அவர் ஏலப் பதிவில் 345வது இடத்தில் உள்ளார் மற்றும் நான்கு டி20 போட்டிகளில் இத்தாலியை பிரதிநிதித்துவப்படுத்தியுள்ளார்.

டிராகா 2024 குளோபல் டி20 கனடாவில் பிராம்ப்டன் வுல்வ்ஸ் அணிக்காக விளையாடினார், அங்கு அவர் ஆறு போட்டிகளில் 11 விக்கெட்டுகளை எடுத்தார். அவரது திறமையை உணர்ந்த மும்பை இந்தியன்ஸ் ILT20ன் சமீபத்திய சீசனுக்காக அவரை ஒப்பந்தம் செய்தது.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.